DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

STC.No.433/2024

Deposition of witness:PW2

| | | | |
|---|---|---|---|
| Name | சிலம்பரசன் | Taluk | |
| Father's Name | சக்கரவர்த்தி | Village | |
| Age | 37 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **11.05.2026.** | | | |

(Accused absent. U/s.317 PFA)

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால், முத்தாண்டிக்குப்பத்தில் கடந்த நான்கு வருடங்களாக உணவகம் வைத்து நடத்தி வருகிறேன். இவ்வழக்கின் புகார்தாரர் வெங்கடேசனை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால், அவர் எனது ஊரை சேர்ந்தவர் மேலும் அவர் எனது வீட்டிலிருந்து மூன்று வீடுகள் தள்ளிதான் உள்ளார். நாங்கள் உறவினர்களா என்றால் இல்லை. நாங்கள் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். வியாபார ரீதியாக எனக்கும், வெங்கடேசனுக்கும் ஏதேனும் தொடர்பு உள்ளதா என்றால் இல்லை. இவ்வழக்கிற்கு நான் இந்த நீதிமன்றத்தில் எவ்வாறு வந்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால், இவ்வழக்கின் புகார்தாரர் கூறியதால் இந்நீதிமன்றத்தில் வந்து சாட்சியம் அளிக்கிறேன். இந்த வழக்கில் புகார்தாரர் வெங்கடேசன் சொல்லிதான் இந்த நீதிமன்றத்தில் நான் வந்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல, இந்த வழக்கில் இன்று சாட்சியம் அளிக்க வேண்டும் என்று தான் வெங்கடேசன் என்னிடம் கூறினார், ஆனால் இவ்வழக்கு சம்பவத்தில் தொடர்புடைய பண பரிவர்த்தனையில் நானும் சம்பந்தப்பட்டுள்ளேன் என்பதனால், இந்த நீதிமன்றத்தில் வந்து நான் சாட்சியம் அளிக்கிறேன். வெங்கடேசனுக்கு நான் ஏதேனும் பணம் கொடுத்துள்ளேனா என்றால் கொடுக்கவில்லை.

2. இவ்வழக்கில் தொடர்புடைய காசோலை தொகையை எதிரியிடம் வெங்கடேசன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதி எந்த தேதி என்றால், 20.09.2023. எத்தனை மணிக்கு மேற்படி தொகையினை வெங்கடேசன் எதிரியிடம் கொடுத்தார் என்றால், அது தற்போது எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. இவ்வழக்கின் எதிரி, இவ்வழக்கின் புகார்தாரரிடம் ஒரு காசோலை கொடுத்ததை நான் பார்த்ததாக கூறியுள்ளதாக பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி காசோலையை இவ்வழக்கின் எதிரி கனகராஜ் என்னை பூர்த்தி செய்ய சொல்லி கேட்டார், அதன் அடிப்படையில் அதனை பூர்த்தி செய்து நான் அவரிடம் கொடுத்தேன், அவர் அவரது கையால் அதனை வெங்கடேசன் கொடுத்தார். இவ்வழக்கின் புகார்தாரர் வட்டி தொழில் செய்பவரா என்றால் இல்லை. நான் எவ்வாறு இவ்வழக்கில் காசோலையை பூர்த்தி செய்து கொடுத்தேன் என்றால், யாரேனும் அவ்வாறு என்னிடம் பூர்த்தி செய்ய சொல்லி உதவி கேட்டால் செய்வேன், அந்த வகையில் தான் இந்த வழக்கின் காசோலையையும் பூர்த்தி செய்து கொடுத்தேன். காசோலை கொடுத்ததாக சொல்லப்படும் சமயத்தில் நான் எவ்வாறு அந்த இடத்தில் இருந்தேன் என்றால், எனக்கும், வெங்கடேசனுக்கும் இருந்த பழக்கத்தில் அன்றைய தினம் அங்கு நான் இருக்க வேண்டிய சூழ்நிலை

இருந்ததனால் அன்று அங்கு இருந்தேன். மேற்படி விவரங்களை இவ்வழக்கின் புகார்தாரர் வழக்கறிஞர் மூலம் அனுப்பிய சட்டபூர்வ அறிவிப்பிலோ அல்லது இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள புகார் மனுவிலோ குறிப்பிட்டுள்ளாரா என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கு காசோலை கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் சமயத்தில், நான் அங்கு இருந்ததாகவோ அல்லது நான்தான் அந்த காசோலையை பூர்த்தி செய்து கொடுத்தேன் என்பது தொடர்பாகவோ, இதர சாட்சிகள் யாரேனும் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளனரா, அவ்வாறு யாரேனும் உள்ளனரா என்றால், அவ்வாறு யாரும் இல்லை. அது தொடர்பாக ஏதேனும் ஆவணம் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்யவில்லை.

3. இவ்வழக்கு கடன் தொகை தொடர்பாக இவ்வழக்கின் புகார்தாரரும், எதிரியும் ஏதேனும் உடன்படிக்கை எழுதிக் கொண்டனரா என்றால் இல்லை. இந்த வழக்கு கடன்தொகை தொடர்பாக ஏற்பட்ட கடன் தொடர்பாக எதிரி வீட்டில் இவ்வழக்கின் புகார்தாரர், அவருக்கும், இவ்வழக்கின் எதிரிக்கும் இடையே இருந்த வியாபார தொடர்பான கொடுக்கல் வாங்கல் தொடர்பாக எதிரியின் வீட்டில் சென்று கேட்டு எதிரி அது தொடர்பாக திருநாவலூர் காவல் நிலையத்தில் புகார் அளித்து, அது குறித்து இரு தரப்பினரையும் காவலர்கள் அழைத்து விசாரித்து ஏற்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் தான், இந்த வழக்கின் காசோலையானது கொடுக்கப்பட்டது என்றால், கேள்விப்பட்டேன், ஆனால் அது பற்றி எனக்கு சரியாக தெரியாது. மேற்படி காவல் நிலையத்தில் ஏற்பட்ட பேச்சுவார்த்தை தொடர்பாக இவ்வழக்கின் புகார்தாரர் வெங்கடேசன் எதிரியானவர் தனக்கு ரூபாய் 1,65,000/- மட்டும் தான் கொடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டு எழுதி கொடுத்தது தொடர்பாக எனக்கு ஏதேனும் தெரியுமா என்றால் தெரியாது.

4. நான் நேரில் இருந்து பார்க்காத ஒரு தொகையைப் பற்றி பார்த்ததாக இவ்வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் கொடுக்கல் வாங்கல் நடந்தது புகார்தாரர் வீட்டில் என்று நான் பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும், உண்மையிலேயே அவ்வாறு கொடுக்கல் வாங்கல் நிகழ்ந்ததை நான் பார்த்திருந்தால் எந்த நேரத்தில் நிகழ்ந்தது என்பதை சரியாக குறிப்பிட்டு கூறியிருப்பேன் என்றாலும் சரியல்ல, கொடுக்கல் வாங்கல் நடந்தது உண்மைதான். மேற்படி நேரம் பற்றி நான் சரியாக குறிப்பிட்டு கூற இயலாததனால் மேற்படி தொகை கொடுத்ததும் எனக்கு தெரியாது என்றாலும், அவ்வாறு கொடுத்ததாக இவ்வழக்கின் புகார்தாரர் கூறியதன் அடிப்படையில்தான் நான் இங்கு சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கின் கடன் தொகை தொடர்பாக நானோ, இவ்வழக்கின் புகார்தாரரோ எவ்வித சரியான ஆவணமும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததால் நான் வாய்மொழியாக சாட்சியம் அளிப்பது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றாலும், இவ்வழக்கின் எதிரி யார் என்று எனக்கு தெரியாது என்றாலும், நானும், புகார்தாரரும் ஒரே ஊர்க்காரர்கள் மற்றும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்ற அடிப்படையிலும், இவ்வழக்கின் புகார்தாரர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க எந்த அடிப்படை விவரமும் தெரியாமல் இவ்வழக்கில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் எதிரிக்கு எதிராக புகார்தாரர் தாக்கல் செய்துள்ள தொகை உண்மையான கடன் தொகை இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.